Regional Bulletin / Puducherry / Tamil Script / 12.06-2024

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி : 12.06.2024** **நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

18 ஆவது மக்களவையின் முதலாவது கூட்டத் தொடர் வரும் 24 ஆம் தேதி தொடங்க உள்ளது.

ஆந்திர முதலமைச்சராக திரு நாரா சந்திரபாபு நாயுடு, ஒடிசா முதலமைச்சராக திரு மோகன் மாஜி ஆகியோர் பிரதமர் திரு நரேந்திர மோடி முன்னிலையில் இன்று பதவி ஏற்றுள்ளனர்.

ஆந்திர முதலமைச்சராக இன்று பதவியேற்றுள்ள திரு சந்திரபாபு நாயுடுவிற்கு புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டமன்ற கூட்டத் தொடர் வரும் 20 ஆம் தேதி தொடங்க உள்ளது.

நாடாளுமன்றம் (15)

18 ஆவது மக்களவையின் முதலாவது கூட்டத் தொடர் வருகிற 24 ஆம் தேதி தொடங்க உள்ளது. மக்களவையில் புதிய உறுப்பினர்களின் பதவியேற்பு, சபாநாயகர் தேர்தல் உள்ளிட்ட அலுவல்கள் மேற்கொள்ளப்படும். நாடாளுமன்ற இரு அவைகளின் கூட்டு அமர்வில், குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவின் உரையும், குடியரசு தலைவர் உரை மீதான விவாதங்களும், இக் கூட்டத் தொடரில் இடம் பெறும். மாநிலங்களவையின் அமர்வுகள் வரும் 27 ஆம் தேதி தொடங்க உள்ளன. நாடாளுமன்ற கூட்டத் தொடர் அடுத்த மாதம் 3 ஆம் தேதி வரை நடைபெறும் என்றும், நாடளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ, சமூக ஊடக பதிவு ஒன்றில் தெரிவித்துள்ளார். தேர்தலில் மக்கள் தங்களுடைய தீர்ப்பை வழங்குகின்ற நிலையில், இனி நாட்டிற்கு சேவை புரிய வேண்டியது, எம்பி களின் கடமை என்றும், 140 கோடி இந்தியர்களின் எண்ணங்களை நிறைவேற்றும் வகையில் பிரச்சனைகளை முழுமையாகவும், முறையாகவும் விவாதிக்க சரியான மேடை, நாடாளுமன்றம் தான் என்றும் அவர் கூறியுள்ளார்.

*நிர்மலா* (19)

மத்திய நிதி மற்றும் கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சராக திருமதி நிர்மலா சீதாராமன் இன்று முறைப்படி அலுவல் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். மீண்டும் நிதியமைச்சராக பணி புரியும் வாய்ப்பை தமக்கு வழங்கியதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார். கடந்த 10 ஆண்டுகளில் வலுவான தலைமை, மற்றும், வளர்ச்சி நோக்கம் கொண்ட ஆளுகை காரணமாகவே பல்வேறு துறைகளில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டு, நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய, வலுவான பொருளாதாரம் உருவாகி இருப்பதாக அவர் தெரிவித்தார். கொள்கை ரீதியிலான நடப்பு பிரச்சனைகள் குறித்து நிதியமைச்சகத்தின் பல்வேறு துறைகளை சேர்ந்த அரசு செயலர்கள் அமைச்சரிடம் எடுத்துக் கூறினர். மக்களின் வாழ்க்கையை எளிதாக்க அரசு உறுதி பூண்டுள்ளதாகவும், 2014 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு வரும் சீர்திருத்தங்கள் தொடரும் என்றும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார். உலக அளவிலான பல சவால்களுக்கு இடையிலும் இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி பாராட்டத் தக்கது என்று அவர் கூறினார். இந்திய பொருளாதாரம் பற்றிய எதிர்கால கணிப்புகளும் சாதகமானவே இருப்பதை அவர் சுட்டிக் காட்டி, வளர்ச்சி அடைந்த இந்தியா ஒன்றை உருவாக்குவதற்கான பிரதமரின் கனவை நனவாக்க புதிய ஆற்றலுடன் அனைத்து துறைகளும் பாடுபட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

*நிதின் கட்கரி* (16)

மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக திரு நிதின் கட்கரி இன்று முறைப்படி அலுவல் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அரசின் 3 ஆவது பதவிக் காலத்திலும், தமக்கு இந்த பொறுப்பை வழங்கியதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலை நோக்குத் தலைமையின் கீழ், உலகத் தரம் வாய்ந்த, நவீன உள் கட்டமைப்பு வசதிகள் இந்தியாவில் கூடுதல் வேகத்தில் உருவாகும் என்று அவர் கூறினார். சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை இணை-அமைச்சர்களாக திரு அஜய் டம்டா, திரு ஹர்ஷ் மல்கோத்ரா ஆகியோரும் இன்று அலுவல் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர்.

வடகிழக்கு பிராந்தியத்திற்கான வளர்ச்சித் துறை அமைச்சராக திரு ஜோதிராதித்யா சிந்தியா இன்று அலுவல் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், வடகிழக்கு மாநிலங்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி எப்போதுமே உயர் முன்னுரிமை அளித்து வந்திருப்பதாக தெரிவித்தார். மத்திய ஜல் சக்தி துறை இணை அமைச்சராக திரு வி சோமண்ணா-வும், இன்று அலுவல் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

ஆந்திரா 1 (17)

தெலுங்கு தேசம் கட்சியின் தலைவர் திரு நாரா சந்திரபாபு நாயுடு ஆந்திர முதலமைச்சராக இன்று பதவி ஏற்றுள்ளார். கிருஷ்ணா மாவட்டம் கேசரப்பள்ளியில் இன்று நடைபெற்ற பதவியேற்பு விழாவில், பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணியின் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு மற்றும் 24 புதிய அமைச்சர்களுக்கு ஆந்திர ஆளுநர் திரு அப்துல் நசீர், பதவிக் பிரமாணமும், ரகசிய காப்பு உறுதி மொழியும் செய்து வைத்தார். புதிய அமைச்சர்களில் ஜனசேனா கட்சியின் தலைவர் திரு பவன் கல்யாண் உட்பட அக்கட்சியை சேர்ந்த 3 அமைச்சர்களும், பாரதிய ஜனதாவை சேர்ந்த 1 அமைச்சரும் அடங்குவர். பதவியேற்பு விழாவில், பிஜேபி தலைவர் திரு ஜேபி நட்டா, மற்றும் திரு நிதின் கட்கரி , திரு கிஷன் ரெட்டி உள்ளிட்ட பிஜேபி அமைச்சர்களும். திரு சீராக் பாஸ்வான், திரு ராம்தாஸ் அத்வாலே, திருமதி அனுப்ரியா பட்டேல் உள்ளிட்ட என்டிஏ அமைச்சர்களும், முன்னாள் குடியரசு துணைத் தலைவர் திரு வெங்கைய நாயுடு, தமிழக முன்னாள் முதலமைச்சர் திரு ஓ.பன்னீர்செல்வம், திரைப்பட நடிகர்கள் சிரஞ்சீவி, ரஜினிகாந்த், மற்றும், சிங்கப்பூர், பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளின் தூதர்களும் கலந்து

ஆந்திரா 2 (5)

கொண்டனர். ஆந்திர முதலமைச்சராக பதவியேற்றுக் கொண்ட திரு சந்திரபாபு நாயுடுவிற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்தார். 2014 ஆம் ஆண்டு ஆந்திர மாநிலம் இரண்டாக பிரிக்கப்பட்ட பின்னர், முதலமைச்சராக திரு சந்திரபாபு நாயுடு பதவி ஏற்பது, இது இரண்டாவது முறையாகும்.

ஒடிசா (10)

ஒடிசா முதலமைச்சராக பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த திரு மோகன் சரண் மாஜி இன்று மாலை பதவியேற்றார். புவனேஷ்வரில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில், பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, மற்றும், திரு ஜூயல் ஓராம், திரு தர்மேந்திர பிரதான், திரு அஸ்வினி வைஷ்ணவ் உள்ளிட்ட மத்திய அமைச்சர்களும், பிஜேபி ஆளும் பல்வேறு மாநிலங்களின் முதலமைச்சர்களும் கலந்து கொண்டனர். ஒடிசா ஆளுநர் திரு ரகுபர் தாஸ், புதிய முதலமைச்சர், மற்றும், இதர அமைச்சர்களுக்கு, பதவி பிரமாணமும், ரகசிய காப்பு உறுதி மொழியும் செய்து வைத்தார். ஒடிசாவில் பிஜேபி, சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்று, முதல் முறையாக ஆட்சி

அமைத்திருப்பதும், மாநிலத்தில் கடந்த 24 ஆண்டுகளாக இருந்த பிஜூ ஜனதா தள் ஆட்சி இதனால் முடிவிற்கு வந்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

*ரங்கசாமி* (8)

ஆந்திர முதலமைச்சராக இன்று பதவியேற்றுள்ள திரு சந்திரபாபு நாயுடுவிற்கு புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார். பிரதமர் திரு நரேந்திர மோடி முன்னிலையில் 4 ஆவது முறையாக திரு சந்திரபாபு நாயுடு முதலமைச்சராக பதவி ஏற்றுள்ளது குறித்து தாம் மிகுந்த மகிழ்ச்சி அடைவதாகவும், ஆந்திர வரலாற்றின் புதிய அத்தியாயத்தில் இன்று தொடங்கி உள்ள பக்கங்கள் மாநிலத்தின் வளர்ச்சி மற்றும் மக்களின் மகிழ்ச்சியால் நிரம்பும் என தாம் நம்புவதாகவும் வாழ்த்து செய்தியில் திரு ரங்கசாமி கூறியுள்ளார்.

*குழந்தை* (7)

குழந்தை பருவம், மகிழ்ச்சி மற்றும் சிரிப்பின் காலமாகவும் கல்வி கற்பதற்கான காலமாகவும் திகழ வேண்டும் என புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி கூறியுள்ளார். உலக குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு

தினத்தை ஒட்டி, இன்று அவர் வெளியிட்டுள்ள செய்தியில், கல்வி, விளையாட்டு மற்றும் பிரகாசமான எதிர்காலம், ஒவ்வொரு குழந்தையின் உரிமை என்றும், இந்த உரிமையை நிலைநாட்ட இந்நாளில் உறுதி ஏற்போம் என்றும் கூறியுள்ளார்.

*பள்ளி திறப்பு (8)*

புதுச்சேரியில் கோடை விடுமுறை முடிந்து அனைத்து பள்ளிகளும் இன்று திறக்கப்பட்டதால் மாணவர்கள் உற்சாகத்துடன் பள்ளிக்கு வந்தனர். தொடக்கப் பள்ளி மாணவர்களை பெற்றோர்கள் அழைத்து வந்து பள்ளியில் விட்டனர். மாணவர் சேர்க்கையை அதிகரிக்கும் வகையில், சில அரசு பள்ளிகளில் மாணவர்கள் உற்சாகமாக வரவேற்கப் பட்டனர். புதுச்சேரியில் கடந்த 6 ஆம் தேதி பள்ளிகள் திறக்கப்படுவதாக இருந்த நிலையில், கடும் வெயில் மற்றும் அனல் காற்று காரணமாக பள்ளிகள் திறக்கும் தேதி இன்றைய தினத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு (5)

தமிழக சட்டமன்ற கூட்டத் தொடர் வரும் 20 ஆம் தேதி தொடங்க உள்ளது. இம்மாதம் 29 ஆம் தேதி வரை கூட்டத் தொடர் நடைபெறும் என்று சட்டப் பேரவை தலைவர் திரு அப்பாவு இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். முன்னதாக தமிழக சட்டமன்றத்தின் கூட்டத் தொடர் வரும் 24 ஆம் தேதி தொடங்குவதாக இருந்தது.

சேலம் விபத்து (6)

சேலம் சுக்கம்படட்டியில் இன்று காலை, தனியார் பேருந்து, 2 மோட்டார் சைக்கிள்கள் மீது மோதியதை தொடர்ந்து, முன்னே சென்ற லாரி மீது மோட்டார் சைக்கிள்கள் மோதியதால் ஏற்பட்ட விபத்தில் ஒரு குழந்தை உட்பட 4 பேர் உயிரிழந்தனர். பேருந்தில் பயணம் செய்த சுமார் 10 பேர் காயமடைந்து, சேலம் மாவட்ட அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். விபத்து குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

## விபத்து (10)

உத்திரபிரதேஷ் மாநிலம் ஹர்தோய் மாவட்டத்தில் இன்று மணல் ஏற்றிய லாரி ஓட்டுனரின் கட்டுப்பாட்டை இழந்து, சாலையோர குடிசை மீது மோதி கவிழ்ந்ததால் ஏற்பட்ட விபத்தில், 4 குழந்தைகள் உட்பட, ஒரே குடும்பத்தை சேர்ந்த 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். கான்பூரில் இருந்து ஹர்தோய் நோக்கி சென்று கொண்டிருந்த போது, லாரி விபத்துக்குள்ளாயிற்று. சாலையோரத்தில் குடிசை அமைத்து வாழ்ந்தவர்கள் நாடோடிகளான நாட் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றும் தகவல் வெளியாகி உள்ளது. விபத்து குறித்து உத்திரபிரதேஷ் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் துயரம் வெளியிட்டுள்ளார். பாதிக்கப் பட்டவர்களுக்கு இயன்ற எல்லா உதவியையும் வழங்க அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தி உள்ளார்.

## மோடி யோகா (5)

சர்வதேச யோகா தினம் நெருங்கி வருவதை முன்னிட்டு, பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக ஊடகத்தில் இன்று வெளியிட்டுள்ள பதிவில், விருக்ஷாசனம் மற்றும் அதன் நன்மைகள் பற்றிய காணொளி ஒன்றை பகிர்ந்து கொண்டுள்ளார். இந்த ஆசனத்தை பயில்வதால் உடலின் சமநிலை உட்பட பல நன்மைகள் கிடைக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

நீட் (14)

இளங்கலை மருத்துவ மாணவர் சேர்க்கைக்கான நீட் தேர்வு முடிவுகள் அண்மையில் வெளியானதை தொடர்ந்து, மாணவர்களிடையே பல சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு, மாணவர்களால் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் மற்றும் அதற்கான விளக்கங்களை தேசிய தேர்வுகள் முகமை இன்று வெளியிட்டுள்ளது. நேர இழப்பிற்காக இழப்பீட்டு மதிப்பெண் வழங்குவதில், குறை தீர்ப்பு குழுவின் பங்கு பற்றிய விளக்கத்தில், உண்மை தகவல்களின் அடிப்படையில் மாணவர்களின் குறைகள் மற்றும் புகார்களை ஆராய கமிட்டி அமைக்கப்பட்டதாக தேர்வு முகமை கூறியுள்ளது. இழப்பீட்டு மதிப்பெண் காரணமாகவே இரண்டு மாணவர்கள், 720 க்கு 718, மற்றும், 719 மதிப்பெண் பெற முடிந்திருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. நீட்-யுஜி தேர்வில், ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்ட கருணை மதிப்பெண்ணை மறு ஆய்வு செய்ய மத்திய கல்வி அமைச்சகம் 4 உறுப்பினர் குழு ஒன்றை அமைத்து இருந்தது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

18 ஆவது மக்களவையின் முதலாவது கூட்டத் தொடர் வரும் 24 ஆம் தேதி தொடங்க உள்ளது.

ஆந்திர முதலமைச்சராக திரு நாரா சந்திரபாபு நாயுடு, ஒடிசா முதலமைச்சராக திரு மோகன் மாஜி ஆகியோர் பிரதமர் திரு நரேந்திர மோடி முன்னிலையில் இன்று பதவி ஏற்றுள்ளனர்.

ஆந்திர முதலமைச்சராக இன்று பதவியேற்றுள்ள திரு சந்திரபாபு நாயுடுவிற்கு புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டமன்ற கூட்டத் தொடர் வரும் 20 ஆம் தேதி தொடங்க உள்ளது.